ஊடக மறுசீரமைப்புக்களுக்கான தேசிய செயலகம்

மதிப்பீட்டு அறிக்கை : இலக்கம் 02

பெப்ரவரி 7,2018

# உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் – பெப்ரவரி 2018

## உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் பற்றிய

## ஊடக அறிக்கையிடலின் மீதான இரண்டாவது மதிப்பீட்டு அறிக்கை 2018

### 1. அறிமுகம்

அண்மையில் நிறைவுபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் குறித்து ஊடகங்கள் செயற்பட்ட முறைமை மற்றும் அவை செய்திகளை வெளியிட்ட விதம் பற்றி ஊடக மறுசீரமைப்புக்களுக்கான தேசிய செயலகம் வெளியிடும் இரண்டாவது மதிப்பீட்டு அறிக்கை இது.

தகவலறிவின் பாற்பட்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்குள்ள உரிமைகளுக்கான நடுநிலையான, சுயாதீனமான அறிக்கையிடல்களை வழங்குவதற்கு, ஊடக வெளி பயன்படுத்தப்பட்டமை குறித்தும் ஊடக வழிகாட்டு நெறிகள் ஊடகத்தொழிற்துறையினரால் கைக்கொள்ளப்பட்ட விதம் பற்றியும் ஆராய இந்த மதிப்பீடு முனைந்துள்ளது.

இந்த மதிப்பீடு இனங்காட்டும் பெறுதிகளின் அடிப்படையில், இந்த விடயம் குறித்து சமூகத்தில் விரிவான, ஆழமான கலந்துரையாடல்கள் உருவாகவும், அது தொழில்சார் ஊடகப் பண்பாட்டை இன்னமும் வலுவூட்டவும் உதவும் என ஊடக மறுசீரமைப்புக்களுக்கான தேசிய செயலகம் நம்பிக்கை கொண்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினாலும், சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்பயிற்சிகளினாலும் உருவாக்கப்பட்ட ஊடக வழிகாட்டுநெறிகள் முறையாகப் பின்பற்றப்பட்டு, போதுமான கால அளவும் வெளியும் விவாதங்களுக்கும் கலந்துரையாடல்களுக்கும் வழங்கப்பட்டு, தாமறிந்த தகவல்களை பாகுபாடின்றியும் நடுநிலையாகவும் எடுத்துச் சொல்லும் விதமாக ஊடகத் தொழிற்துறையினரால் கடமைகளும் பொறுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டனவா என்பதை அறிவதற்கு ஏற்றவகையிலேயே இந்த மதிப்பீடு அமைந்திருந்தது.

### 2. முறையியல்

ஊடகங்களிடமிருந்து செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்கள் அடிப்படையில் பெறப்பட்ட தகவல்கள் விரிவான உள்ளடக்க ஆய்விற்கு உள்ளாக்கப்படும் விதமாக ஆய்வு முறையியல் அமைந்திருந்தது.

தகவல்களை மதிப்பிடுவதற்கான அளவுச் சுட்டிகள் பின்வருமாறு அமைந்தன : தொலைக்காட்சி செய்திகள் மற்றும் கலந்துரையாடல்கள் / விவாதங்கள் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் –

நிமிடங்களிலும் செக்கன்களிலும், அச்சு ஊடகங்களில் தரப்பட்ட வெளி – சதுர சென்ரிமீற்றர்களிலும் என்றவாறாக அவை கருத்திற்கொள்ளப்பட்டன. [1]

ஒரு ஜனநாயக நாட்டில், தேர்தல்கள் சமயத்தில் ஊடகங்கள் வலுவான வகிபங்கினையாற்றுகின்றன. இதன்படி, சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் நிர்ணயங்களின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழு விதித்த வழிகாட்டுநெறிகள் ஊடகங்களால் கடைப்பிடிக்கப்பட்டனவா என்பது எண்சார் மற்றும் பெறுதிசார் தகவல் ஆய்வின் வழியே ஆய்விற்குட்படுத்தப்பட்டது.

ஜனவரி 23 – 31 காலப்பகுதியில் இந்த அறிக்கைக்கான தகவல்கள் திரட்டப்பட்டன.

பின்வரும் ஆறு தொலைக்காட்சி அலைவரிசைகள் பிரதான சிங்கள செய்தி அறிக்கைகளுக்காக அவதானிக்கப்பட்டன – **ரூபவாஹினி, ஐ.ரி.என்., சிரச, சுவர்ணவாஹினி, தெரண, ஹிரு.** இவற்றோடு, பின்வரும் செய்திப் த்திரிகைகள் வழியாக அச்சு ஊடகங்கள் வழியான செய்திகள் மற்றும் கலந்துரையாடல்கள் அதே காலப்பகுதியில் ஆய்விற்குட்படுத்தப்பட்டன [2] : **லங்காதீப, இரித, திவயின, திவயின இரித, லக்பிம, லக்பிம இரித, மௌபிம, மௌபிம இரித, தேசய, ராவய, லங்கா இரித, தினமின, சிலுமின, ரச, அத ஞாயிறு சியதேச** ஆகிய மொத்தம் 19 செய்திப் பத்திரிகைகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

செய்திப் பத்திரிகைகளைப் பொறுத்தளவில், அவற்றின் முன்பக்கங்களிலும், தொடர்ச்சிப் பக்கங்களிலும் பல்வேறு அரசியல் கட்சிகள் தொடர்பில் அளிக்கப்பட்டிருந்த 'வெளி' மதிப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் பயிற்சிக்காக, தொலைக்காட்சி அலைவரிசைகளை அவதானிப்பதற்கு, மொத்தமாக **24 மணி நேரங்களும் 10 நிமிடங்களும்**, அதேபோல, 9 நாட்களைக் கொண்ட குறித்த காலப்பகுதியில், ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த 19 செய்திப் பத்திரிகைகளில், **98, 183 சதுர சென்ரிமீற்றர்களும்** கவனத்திற்கொள்ளப்பட்டன.

## 3. அவதானம்

### 3.1 செய்தி உள்ளடக்கம் – தொலைக்காட்சி மற்றும் அச்சு ஊடகம்

பல்வேறு அரசியற் கட்சிகளுக்கு உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் செய்திப்பத்திரிகைகளின் முன்பக்கங்களிலும், தொலைக்காட்சி அலைவரிசைகளின் பிரதான செய்தி ஒளிபரப்புக்களிலும் வழங்கப்பட்டிருந்த செய்திகள் எவ்வாறு அவற்றின் பிரதிமைகளைக் கட்டமைப்பதற்கு அல்லது அந்தப் பிரதிமைகளை கட்டுடைப்பதற்கு நேரடியான அல்லது மறைமுகமான தாக்கங்களை உருவாக்கியிருந்தன என்பது பற்றி ஆராயப்பட்டது. (பார்க்க : அட்டவணை 1)

| Total news items Content (Print media/ television channels) | Number of total news items | Election non-related news items | Election related news items | | Representation of the respective political parties | | | | | | | | Awareness of the voter regarding the election |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Direct | Indirect | UPFA | | UNP | | SLPP | | JVP | | |
| | | | | | Demotion | Promotion | Demotion | Promotion | Demotion | Promotion | Demotion | Promotion | |
| Front page news of the observed newspapers | 650 | 181 | 133 | 336 | 56 | 99 | 99 | 76 | 59 | 35 | 4 | 21 | 29 |
| Main news bulletin of the observed electronic media | 855 | 175 | 502 | 178 | 08 | 189 | 32 | 183 | 26 | 138 | 0 | 66 | 25 |
| Total | 1505 | 356 | 635 | 514 | 64 | 288 | 131 | 209 | 85 | 173 | 4 | 87 | 19 |

அட்டவணை – 1

இந்த மதிப்பீட்டுக் காலப்பகுதியில், செய்திப்பத்திரிகைகளின் முன்பக்கங்களிலும், தொலைக்காட்சி அலைவரிசைகளின் பிரதான செய்தி ஒளிபரப்புக்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குச் சாதகமாக 288 செய்திகளும், ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமாக 209 செய்திகளும் கிடைக்கப்பெற்றிருந்தன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஜே.வி.பி. என்பன முறையே 173 மற்றும் 87 சாதகமான செய்திகளைப் பெற்றிருந்தன. எதிர்மறைச் செய்திகள் பின்வரும் எண்ணிக்கையில் அமைந்திருந்தன : ஐக்கிய தேசியக் கட்சி 131, .ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 85, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 64, ஜே.வி.பி. 4. (பார்க்க : வரைபடம் 1)




வரைபடம் – 1

### 3.2 செய்தி உள்ளடக்கம் – தினசரி மற்றும் வார இறுதி செய்திப் பத்திரிகைகள்

மேற்குறித்த காலப்பகுதியில் அவதானிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த செய்திப்பத்திரிகைகளின் முதற் பக்கங்களிலும் அவற்றின் தொடர்ச்சியாகவும் வெளிவந்திருந்த 650 செய்திகள் மதிப்பாயப்பட்டன. இவற்றில், 181 செய்திகள் தேர்தலுடன் தொடர்பற்றவையாக இருந்தன. 133 செய்திகள் நேரடியாகத்

தேர்தலுடன் தொடர்புள்ளவையாகவும், **336** செய்திகள் மறைமுகமாகத் தொடர்புள்ளவையாகவும் அமைந்திருந்தன. அரசியற் கட்சிகளுடன் செய்திகள் தொடர்புறும் வகையை அட்டவணை **2** எடுத்துக் காட்டுகிறது.

| Newspaper | Total news | News items not relevant to the election | Direct | Indirect | UPFA | | UNP | | SLPP | | JVP | | Awareness of the voter |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Promotion | Demotion | Promotion | Demotion | Promotion | Demotion | Promotion | Demotion | |
| Daily *Lankadeepa* | 64 | 21 | 17 | 26 | 7 | 6 | 3 | 5 | 3 | 4 | | | 2 |
| Sunday *Lankadeepa* | 9 | | 5 | 4 | 1 | | 2 | 1 | 3 | | | | 1 |
| Daily *Divayina* | 86 | 19 | 13 | 54 | 15 | 13 | 7 | 21 | 7 | 8 | 4 | | 4 |
| Sunday *Divayina* | 12 | 4 | | 8 | | 2 | | 6 | 1 | | | | 1 |
| Sunday *Lakbima* | 5 | | | 5 | 1 | 2 | 2 | 1 | | | | | |
| Daily *Lakbima* | 64 | 16 | 17 | 31 | 11 | 6 | 8 | 7 | 8 | 4 | 4 | | 7 |
| Sunday *Rivira* | 9 | 2 | 3 | 4 | 3 | 1 | 2 | 2 | 1 | | 1 | | 1 |
| *Rivira*Daily | 53 | 18 | 9 | 26 | 7 | 4 | 5 | 12 | 4 | 2 | 4 | | 1 |
| Daily *Mawbima* | 77 | 24 | 9 | 44 | 8 | 5 | 6 | 15 | 4 | 2 | 4 | 2 | |
| Sunday *Mawbima* | 11 | 7 | 3 | 1 | 2 | | | 1 | 1 | | | | |
| *Deshaya* | 9 | 0 | 5 | 4 | 2 | | 1 | 1 | 1 | | 1 | | |
| *Ravaya* | 11 | 4 | 1 | 6 | 1 | 1 | 1 | 2 | | | | | |
| *Lanka* | 11 | 3 | | 8 | | 2 | | 3 | | 3 | 2 | | |
| *Aththa* | 10 | 2 | 3 | 5 | | | | 4 | | | 1 | | |
| *Dinamina* | 83 | 26 | 25 | 32 | 21 | 2 | 22 | 4 | | 16 | | | 4 |
| *Silumina* | 12 | 7 | | 5 | 4 | | 4 | | | 1 | | | |
| *Rasa* | 47 | 14 | 6 | 27 | 4 | 7 | 5 | 6 | | 5 | 1 | | 1 |
| *Ada* | 70 | 14 | 14 | 42 | 10 | 5 | 7 | 8 | 2 | 12 | 4 | 2 | 7 |
| *SiyadesaIrida* | 7 | | 3 | 4 | 2 | | 1 | | | 2 | | | |
| Total | 650 | 181 | 133 | 336 | 99 | 56 | 76 | 99 | 35 | 59 | 22 | 4 | 29 |

அட்டவணை – 2

**ரிவிர** செய்திப்பத்திரிகை ஜனவரி **29** மற்றும் **30** ஆகிய நாட்களில் பதிப்புச் செய்யப்படவில்லை என்பதும், **ஜனயுகய** மற்றும் **இரித ஜனயுகய** ஆகிய இரண்டும் இக்காலப்பகுதியில் ஆய்விற்குட்படுத்தப்படவில்லை என்பதும் இங்கு கவனத்திற்குத் தரப்படுகிறது.

வரைபடம் **2** இல், **19** செய்திப் பத்திரிகைகளிலும் முன்பக்கங்களில் வெளியான செய்திகளில் அவை தேர்தலுடன் நேரடியான அல்லது நேரடித் தொடர்பற்ற மற்றும் தேர்தலுடன் தொடர்பற்ற செய்திகளின்

வகைமைகளை எடுத்துக் காட்டுகிறது. மதிப்பீடு இடம்பெற்ற ஜனவரி 23 – 31 காலப்பகுதியில், 72.1. % பகுதி (வெளி) தேர்தலுடன் தொடர்புடைய செய்திகளுக்கு வழங்கப்பட்டிருந்தமையை ஆய்வு காட்டுகிறது. இது முன்னைய மதிப்பீட்டில் 65.5 % ஆக அமைந்திருந்தது நோக்கத்தக்கது (ஜனவரி 20 – 22).




வரைபடம் – 2

இவற்றில், சில செய்திகள் பக்கஞ்சாராமலும், சில அரசியற் கட்சியொன்றுக்குச் சார்பாக அல்லது ஏதாவது அரசியற் கட்சிக்கு நேர்மறையானவையாக அறிக்கையிடப்பட்டிருந்தன.

வரைபடம் 3 இல் குறிப்பிட்டபடி, எண்சார் வழியில் ஆய்வு செய்தபோது, செய்திப் பத்திரிகைகளில் அரசியற்கட்சிகளுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தமையை அறியமுடிந்தாலும், சில சமயங்களில் அரசியற்கட்சியொன்றுக்கு நேர்மறைத் தாக்கத்தைத் தருவதாகவே அவ்வெளி பயன்படுத்தப்படிருந்தமையையும் அறியமுடிந்தது.




வரைபடம் – 3

### 3.3 செய்தி உள்ளடக்கம் – தொலைக்காட்சி இரவு நேர பிரதான செய்தி ஒளிபரப்புக்கள்

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள், மொத்தம் 855 செய்திகள் தொலைக்காட்சி இரவு நேர பிரதான செய்தி ஒளிபரப்புக்களில் அவதானிக்கப்பட்டன. இவற்றில், 175 செய்திகள் தேர்தலுடன் தொடர்பற்றவையாக இருந்தபோது, 502 செய்திகள் தேர்தலுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தன. தேர்தலுடன் நேரடியாகத் தொடர்புபடாத செய்திகளாக 178 அமைந்திருந்ததால், தேர்தல் பற்றிய மொத்தச் செய்திகளின் எண்ணிக்கை 680 ஆகக் காணப்பட்டது. கீழேயுள்ள அட்டவணை 3 அரசியற்கட்சிகளுடன் செய்திகள் கொண்டிருந்த தொடர்பைக் காட்டுவதுடன், அக்கட்சிகள் தொடர்பில் குறித்த செய்திகள் கொண்டிருந்த நேர் மற்றும் எதிர்த்தாக்கங்களை அவை எவ்விதம் கொண்டிருந்தன என்பதும் இனங்காட்டப்பட்டிருக்கிறது.

| TV Channel | All News | News un - related to the Election | Indirectly election related | Directly Election related | U.P.F.A | | U.N.P | | S.L.P.P | | J.V.P | | News that informs the voter about the Election |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Downplaying | Promoting | Downplaying | Promoting | Downplaying | Promoting | Downplaying | Promoting | |
| S.L.R.C | 186 | 27 | 24 | 135 | | 45 | | 35 | 6 | 30 | | 4 | 4 |
| I.T.N | 147 | 26 | 36 | 85 | | 39 | | 36 | 7 | 12 | | 1 | 6 |
| SIRASA | 103 | 15 | 30 | 58 | 1 | 29 | 14 | 19 | 9 | 12 | | 1 | 2 |
| SWARVAVAHINI | 144 | 51 | 15 | 78 | | 13 | | 39 | | 17 | | | 5 |
| DERANA | 147 | 16 | 46 | 85 | 5 | 38 | 14 | 32 | 4 | 30 | | 1 | 5 |
| HIRU | 128 | 40 | 27 | 61 | 2 | 25 | 4 | 22 | | 37 | | | 3 |
| Total | 855 | 175 | 178 | 502 | 8 | 180 | 32 | 183 | 26 | 138 | 0 | 7 | 25 |

அட்டவணை – 3

வரைபடம் 4 ஆனது, ஆறு தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் மதிப்பிடப்பட்ட செய்திகள் தொடர்பிலான நூற்றுவீதத்தைக் காட்டுகிறது. ஜனவரி 20 முதல் 22 வரையான காலப்பகுதியில் ஆய்வு செய்யப்பட்டபோது கண்டறியப்பட்டிருந்த நேரடியான மற்றும் மறைமுகமான தேர்தல் செய்திகளின் கால ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும்போது, இம்முறை அது அதிகமானதாக இருந்தது. இதன்படி, ஆறு தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் தேர்தலுடன் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்புபட்ட செய்திகள் முதலாவது மதிப்பீட்டில் 76.7 % ஆக இருந்தபோது, பின்னர் ஜனவரி 23 – 31 வரையான காலப்பகுதியில் அது 79.54 % ஆக அமைந்திருந்தது.




வரைபடம் – 4

வரைபடம் 5 ஆனது, மதிப்பீட்டுக் காலத்தில் ஆறு தொலைக்காட்சி அலைவரிசைகளின் இரவு நேர பிரதான செய்தி ஒளிபரப்புக்களில் அரசியற்கட்சிகள் நேர்த்தன்மையுடனும், எதிர்த்தன்மையுடனும் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட வகையைக் காட்டுகிறது.




வரைபடம் – 5

வரைபடம் 6 ஆனது, ஒன்பது நாட்கள் கொண்ட மதிப்பீட்டுக் காலத்தில் ஆறு தொலைக்காட்சி அலைவரிசைகளின் இரவுநேர பிரதான செய்தி ஒளிபரப்புக்களில் அரசியற்கட்சிகள் நேர்த்தன்மையுடன் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டமை வகைகாட்டப்படுகிறது.




வரைபடம் – 6

தமது அரசியல் முன்னுரிமைகளின் அடிப்படையில், சில தொலைக்காட்சி அலைவரிசைகளால் சில அரசியற்கட்சிகளுக்கு ஒப்பீட்டளவில் அதிக நேரமும் நேர்த்தன்மையுடன் அவற்றின் பிரதிமை செய்திகள் வழியே சித்திரிக்கப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. இந்த வகையில், அரசுக்குச் சொந்தமான இரண்டு தொலைக்காட்சிகளும் நடந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வரைபடம் 7 இல், எதிர்த்தன்மையுடன் அரசியற்கட்சிகள் செய்திகளில் சித்திரிக்கப்பட்டிருந்த எண்ணிக்கை எம்மால் அவதானிக்கப்படுகிறது.




வரைபடம் – 7

## 3.4 அரசுக்குச் சொந்தமான அச்சு மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் – அரசியற்கட்சிகள் தொடர்பில் செய்திகள் வெளியீடு

**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்** மற்றும் **சுயாதீன தொலைக்காட்சிச் சேவை (ஐ.ரி.என்.)** ஆகியன அரசுக்குச் சொந்தமானவையாகும். அதேபோல – **தினமின, ரச, சிலுமின** ஆகிய செய்திப் பத்திரிகைகளும் அரசின் கட்டுப்பாட்டில் வெளிவருவனவாகும். கீழ்வரும் அட்டவணையும் வரைபடமும், அரசு ஊடகங்கள் தேர்தலில் போட்டியிட்ட பிரதான அரசியற்கட்சிகள் தொடர்பில் எவ்விதம் செய்திகளை வெளியிட்டன என்பதை அடையாளங்காட்டுகின்றன.

அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் தொலைக்காட்சி மற்றும் அச்சு ஊடகங்களில் அறிக்கையிடல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உள்ளடக்க ஆய்வின்படி, அவை பக்கச்சார்பற்றவையாக, சுயாதீனமாக அல்லது விருப்புவெறுப்பற்று மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு மதிப்பளித்து இயங்கவில்லை என்பது தெரியவருகிறது.

| News Paper/ TV Channel | All News | News non Related to the Election | Directly Related | Indirectly Related | U.P.F.A | | U.N.P | | S.L.P.P | | J.V.P | | News that informs the voter about the Election |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Downplaying | Promoting | Downplaying | Promoting | Downplaying | Promoting | Downplaying | Promoting | |
| S.L.R.C | 186 | 27 | 135 | 24 | 45 | | 35 | | 30 | 6 | 19 | | 4 |
| I.T.N | 147 | 26 | 85 | 36 | 39 | | 36 | | 12 | 7 | 10 | | 6 |
| DINAMINA | 83 | 26 | 25 | 32 | 21 | 2 | 22 | 4 | | 16 | | | 4 |
| SILUMINA | 12 | 7 | | 5 | 4 | 1 | 4 | | | | | | |
| RESA | 47 | 14 | 6 | 27 | 4 | 7 | 5 | 6 | 5 | | 1 | | 1 |
| Amount | 475 | 100 | 251 | 124 | 113 | 9 | 102 | 10 | 42 | 35 | 30 | | 15 |

அட்டவணை – 4




வரைபடம் – 8

அட்டவணை 4 இன்படி, நேர்த்தன்மையுடனான மற்றும் எதிர்த்தன்மையுடனான செய்திகளைப் பொறுத்தளவில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பற்றி 122 செய்திகளும் ஐக்கிய தேசியக் கட்சி பற்றி 112 செய்திகளும் இடம்பெற்றிருந்தன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஜே.வி.பி. தொடர்பில் அத்தகைய செய்திகள் முறையே 77 மற்றும் 29 ஆக அமைந்திருந்தன. மதிப்பீட்டுக் காலத்தில், **தினமின** மற்றும் **சிலுமின** செய்திப்பத்திரிகைகளின் முன்பக்கங்களில் 62 செய்திகள் தேர்தல் தொடர்பில் – நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டு வெளியாகியிருந்தன. இவற்றில் ஜே.வி.பி. தொடர்பில் ஒரு செய்திகூட இடம்பெற்றிருக்கவில்லை. மதிப்பீட்டுக் காலத்தில், ஒரேயொரு செய்திப்பத்திரிகை : **ரச** மத்திரம் ஜே.வி.பி. தொடர்பில் அதுவும் ஒரு செய்தியை மாத்திரமே பிரசுரித்திருந்தது.

### 3.5 தொலைக்காட்சிகளில் அரசியல் கலந்துரையாடல்கள்

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் – இரண்டு அரசின் கட்டுப்பாட்டில் இயங்குவதுடன், ஏனைய நான்கும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமானவையாகும். இவற்றில் – தனியார் அலைவரிசைகளான **ஹிரு, தெரண, சிரச** ஆகியவற்றிலும், அரசின் கட்டுப்பாட்டிலான **ஐ.ரி.என்.** அலைவரிசையிலும் நடாத்தப்பட்ட அரசியல் கலந்துரையாடல்கள் ஆய்வு செய்யப்பட்டன. இந்த அலைவரிசைகளில் ஒளிபரப்பான அரசியல் கலந்துரையாடல்கள் நிகழ்ச்சிகள் வருமாறு : ***பலய, சலகுன, சட்டன, தீரணய*** *மற்றும்* ***சன்வதய.***

முதற்படியாக, பெறுதிசார் தகவல்கள் சேகரிப்பு முடிவடைந்ததும், கூடுதல் தகவல்கள் விரிவாக ஆராயப்பட்டன.

நெறியாளரின் நடத்தை, ஊடக ஒழுக்க நெறிகளின்பாலான ஒழுங்கமைப்பு, வேட்பாளரொருவரை முன்னிறுத்துதல், தீர்மானம் நோக்கிய நகர்வு, சுயாதீனத்தை வெளிப்படுத்துதல், குறித்த ஓர் அரசியல்

நிலைப்பாட்டை வலியுறுத்துதல், உடல்மொழி, பொருத்தப்பாடு, தொனி, விசேட கவனம் ஆகியன மதிப்பீட்டில் கவனத்திற்கொள்ளப்பட்டன.

தாம் சுயாதீனமான ஊடகவியலாளர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைச் சேர்ந்த மூன்று ஊடகவியலாளர்கள் குறித்த நிகழ்ச்சியை தமது நோக்கங்களுக்கு இசைவாக நகர்த்திச்செல்ல முயன்ற ஒரு நிகழ்வு இந்தவகையில் கருத்திற்கொள்ளத்தக்கதாக அமைந்தது. குறித்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள் தமது அபிபிராயங்களைக் கூறுவதற்கு குறித்த ஊடகவியலாளர்கள் சந்தர்ப்பம் வழங்காமலிருந்ததையும், தமது நம்பிக்கைகளை மேலோங்கச் செய்யும்வண்ணம் கலந்துரையாடலை நகர்த்திச்செல்ல அவர்கள் முனைந்தமையும் கண்கூடாகத் தெரிந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்படும் விடயம் தொடர்பில் அனைத்துப் பங்கேற்பாளர்களும் சுயாதீனமான சூழலில் தமது பார்வைகளை வெளியிட இடந்தர வேண்டிய ஊடகத் தொழிற்துறையாளர்கள், இந்த நிகழ்ச்சியில், தமது சொந்த நிகழ்ச்சி நிரலையே முன்னிறுத்தி இருந்தனர். (பார்க்க : முடிவுக் குறிப்பு 1)

இன்னொரு சந்தர்ப்பத்தில், நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியவர் அதிதியாகப் பங்கேற்றவர் மீது எழுப்பிய மன உளைச்சலை உருவாக்கக்கூடிய கேள்வியினால் எழுந்த முரண்படும் சூழல், நிகழ்ச்சியைப் பிரதானமாக நெறிப்படுத்தியவரின் தலையீட்டின் மூலம் தணிக்கப்பட வேண்டிய நிலையைத் தோற்றுவித்தது. குறித்த தொகுப்பாளரின் அணுகுமுறை ‘கொடூரமானதாக’ இருந்ததாக பங்கேற்பாளர் நெறியாளரிடம் தெரிவித்திருந்தார் (பார்க்க : முடிவுக் குறிப்பு 2). பிறிதொரு நாளில் ஒளிபரப்பான இந்த நிகழ்ச்சியின் மற்றுமொரு அங்கத்தில், அதே தொகுப்பாளர் இன்னொரு அரசியற்கட்சித் தலைவரிடம் முக்கிய விடயங்கள் பற்றிக் கேள்விகள் எழுப்புவதைத் தவிர்த்துக் கொண்டமையையும் அவதானிக்க முடிந்தது. இது, குறித்த தொகுப்பாளர் / நிறுவனம் ஊடக அறநெறிகளுக்கு மாறாகப் பாகுபாட்டுடன் நடந்துகொண்டமையை எடுத்துக்காட்டுவதாயிருந்தது. (பார்க்க : முடிவுக் குறிப்பு 3)

கலந்துரையாடலின் இறுதிச் சுற்றில், பங்கேற்பாளர்கள் புதிதாக விவாதங்களை / பார்வைகளை முன்வைப்பது பதிலளிக்கும் வாய்ப்புக்கான நேரவரையறையினால் வரவேற்கப்படுவதில்லை. ஆனால், இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டல் சில கலந்துரையாடல்களில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. (பார்க்க : முடிவுக் குறிப்பு 4)

அரச கட்டுப்பாட்டிலான தொலைக்காட்சிகளில் பங்கேற்பாளர்கள் சுதந்திரமாகக் கருத்துக்களை முன்வைப்பதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகள் பின்பற்றப்பட்டமை அவதானிக்கப்பட்டாலும், அரசாங்க கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விசேட கவனம் செலுத்தும் போக்கினையும் பார்க்கமுடிந்தது. (பார்க்க : முடிவுக் குறிப்பு 5)

இவற்றிலிருந்தும் வேறுபட்டதாக, **ஐ.ரி.என்.** ஆனது அரசின் கட்டுப்பாட்டில் இயங்கினாலும், எதிர்க்கட்சிகளுக்கு அவற்றின் சொந்த நிகழ்ச்சிகளுக்கும் நேரத்தை ஒதுக்கித் தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகிறது. (பார்க்க : முடிவுக் குறிப்பு 6)

### 3.6 தொலைக்காட்சிகளில் செய்திப்பத்திரிகைத் தலையங்கங்கள் வாசிக்கப்படுதல்

மொத்தமுள்ள ஆறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் நான்கு மீது, அவை தினசரி மற்றும் வாரயிறுதி செய்திப்பத்திரிகைத் தலையங்கங்களை முன்வைக்கும் விதமும் மதிப்பிடப்பட்டது. **ரூபவாஹினி**யின் **'அத சிவுதேச விமசும', ஹிருவின் 'பத்திரே விஸ்தரே', தெரணவின் 'தெரண அருண', சுவர்ணவாஹினியின் 'அத தவச'** ஆகியன ஆய்விற்குட்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சிகள் ஆய்வாளர்களால் கண்காணிக்கப்பட்டு, பெறுதிசார் ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

**ரூபவாஹினியின் 'அத சிவுதேச விமசும' :** தெரிவுசெய்யப்பட்ட செய்திப்பத்திரிகைகளும், நிகழ்ச்சிக்கென தெரிவு செய்யப்பட்ட செய்திகளும் பக்கச்சார்பை எடுத்துக்காட்டின. தலையங்கங்களை வாசிப்பதிலும் நிறுவனத்தின் அரசியற்சார்பை இனங்கண்டுகொள்ள முடிந்தது. எதிர்க்கட்சிகள் தொடர்பிலான செய்திகளை வாசிக்கும்போதும் கூட நிறுவனம் கொண்டிருக்கக்கூடிய அரசியல் சாயல் முன்னிலைப்படுத்தப்பட்டது. குறிப்பாக, செய்திகள் சம்பந்தப்பட்ட புகைப்படங்களை காட்சிப்படுத்துகையிலும் இந்தப் பாதிப்பு உணரப்பட்டது. இந்த சந்தர்ப்பங்கள் யாவற்றிலும் அரசாங்கக் கட்சிகள் இரண்டுமே, எதிர்க்கட்சிகளை விட அதிக வெளிப்படுத்தல் வாய்ப்புக்களைக் கொண்டிருந்தன. (பார்க்க : முடிவுக் குறிப்பு 7)

**ஹிருவின் 'பத்திரே விஸ்தரே':** நாளொன்றின் அனைத்து செய்திப்பத்திரிகைகளும் தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும், குறித்த நாளின் கவனாஈர்ப்பை அதிகம் பெற்ற செய்திகளே அல்லது நடப்புச் செய்திகளே வாசிக்கப்படுவது அதிகமாயிருந்தது. அனைத்துப் பத்திரிகைகளிலிருந்தும் ஒரேயொரு பத்திரிகை தெரிவுசெய்யப்படுவதும் அல்லது ஒரே பத்திரிகையின் செய்திகள் அடிக்கடி மேலாதிக்கம் செலுத்துவதும் அவதானிக்கப்பட்டது. நிகழ்ச்சியை வழங்கியவர், தனது சொந்த அபிப்பிராயங்களை தெரிவுசெய்து வாசிக்கப்பட்ட செய்திகள் மீது தெரிவித்தமையும், குறிப்பாக கேலிச்சித்திரங்கள் பற்றிக் கலந்துரையாடும்போது இப்போக்கு வெளிப்படையாகத் தெரிந்தமையும் அவதானிக்கப்பட்டது. (பார்க்க : முடிவுக் குறிப்பு 8)

**சுவர்ணவாஹினியின் 'அத தவச':** வரையறுத்த எண்ணிக்கையிலான செய்திப்பத்திரிகைகளும், செய்திகளுமே இந்த நிகழ்ச்சியில் முன்வைக்கப்பட்டன. செய்திகளுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்புபட்ட தகவல்கள் மாத்திரமல்லாது, வேறு தகவல்களும் அங்கு தெரிவிக்கப்பட்டன. அனைத்து அரசியற் கட்சிகளும் சமமான பிரதிநிதித்துவத்தைப் பெறுவது தெளிவானதுடன், செய்திகளைத் தெரிவுசெய்யும்போது, நிகழ்ச்சியை வழங்கியவர் வழிகாட்டுநெறிகளைக் கருத்திற்கொண்டவராகவும் காணப்பட்டார். (பார்க்க : முடிவுக் குறிப்பு 9)

**தெரணவின் 'தெரண அருண':** இந்த நிகழ்ச்சியில் சகல பத்திரிகைகளையும், சகல செய்திகளையும் வழங்கும் முயற்சி இனங்காணப்பட்டது. ஆயினும், தலையங்கங்களை வழங்கிய செய்திகளும் அவற்றோடு தொடர்புடைய வலுவான அல்லது சக்திமிக்க அரசியற்கட்சிகளும் முன்னுரிமையைப் பெற்றிருந்தன. (பார்க்க : முடிவுக் குறிப்பு 10)

கேலிச்சித்திரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும்போது, நிகழ்ச்சியை வழங்கியவர் தனது சொந்தச் சிந்தனைகளையும் கையாளுகைகளையும் தெரிவிப்பதாயிருந்தார். (பார்க்க : முடிவுக் குறிப்பு 11)

**ஊடகங்கள் மீதான மற்றும் ஊடக நெறிமுறைகளின் பிரயோகம் தொடர்பிலான பொது அவதானம்**

தேர்தல்கள் ஆணைக்குழுவானது, டிசம்பர் 4, 2017 அன்று, 2048/1 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலை ஊடகங்களுக்கான நெறிமுறைகள் தொடர்பில் வெளியிட்டிருந்தபோதிலும், செய்திப் பத்திரிகைகளோ தொலைக்காட்சி அலைவரிசைகளோ அவற்றைக் கடைப்பிடிப்பதில் தீவிர கரிசனை எதனையும் காட்டவில்லையென்பதை ஜனவரி 31 , 2018 இல் வெளியிடப்பட்ட ஜனவரி 20 –22 வரையான காலப்பகுதிக்கான எமது இடைக்கால அறிக்கையில் தெரியப்படுத்தியிருந்தோம்.

இரண்டாவது மதிப்பீட்டுக் காலப்பகுதியான ஜனவரி 23 – 31, 2018 வரையான காலப்பகுதியிலும் செய்திப்பத்திரிகைகளின் முதற்பக்கச் செய்திகளும், தொலைக்காட்சி அலைவரிசைகளின் செய்தியறிக்கைகள், கலந்துரையாடல்கள் / விவாதங்கள் ஆகியனவும் மதிப்பிடப்பட்டன. இதன்படியும், செய்திப் பத்திரிகைகளோ தொலைக்காட்சி அலைவரிசைகளோ தேர்தல்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டுநெறிகளை பெரிதாகக் கவனத்திற்கொள்ளவில்லை என்பது இக்காலப்பகுதியிலும் தெளிவானது.

(1) **அனைத்து ஊடக அமைப்புக்களும் நடுநிலையான, சுயாதீனமான, பக்கச்சார்பற்ற வகையில் செய்தியறிக்கைகளை, அரசியல் நிகழ்வுகளை மற்றும் தொடர்புபட்ட ஏனைய செயற்பாடுகளை முன்வைப்பதில் கரிசனையாயிருக்க வேண்டும்** என முதலாவது வழிகாட்டுநெறி கூறுகிறது. ஆனாலும், சுதந்திரமான மற்றும் பக்கச்சார்பற்ற நெறிமுறைகளை அலட்சியம்செய்தும், தமது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்வைப்பதில் ஆர்வமாயிருந்ததுமான போக்கினையே தொலைக்காட்சி அலைவரிசைகளும், அச்சு ஊடகங்களும் காட்டின என்பதனை மதிப்பீட்டாளர்கள் கண்டறிந்தனர். (பார்க்க : முடிவுக் குறிப்பு 12)

(2) **ஒரு கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ தீங்கு பயப்பதாகவோ அல்லது பிரத்தியேக முன்னுரிமையை வழங்குவதாகவோ அமையாது ஊடகங்கள் அவசியம் செயற்படவேண்டும்** என்று, தேர்தல்கள் ஆணைக்குழுவின் இரண்டாவது நெறிமுறை கூறுகிறது. இது, ஒருபோதுமே கைக்கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு ஊடகமும் தான் தெரிவுசெய்த அரசியற்கட்சியை ஊக்குவிப்பதான அல்லது தரமிறக்குவதான நடவடிக்கையில் ஈடுபட்டதை ஆய்வாளர்கள் அவதானித்தனர். (பார்க்க : முடிவுக் குறிப்பு 13)

(3) வழிகாட்டுநெறி நான்கு கூறுவதான **நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் செய்திகளை அளிக்கும்போதோ அல்லது அச்சு ஊடக அறிக்கைகளை அல்லது கேலிச்சித்திரங்களைப் பகிரும்போதோ எந்தவொரு அரசியற்கட்சியையும் ஊக்குவிப்பதாக அல்லது தரங்குறைப்பதாக நடந்துகொள்ளாமலிருப்பதை தொலைக்காட்சிகளும், வானொலிகளும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்** என்பது கௌரவிக்கப்படவில்லை என்பதைப் பல நிகழ்வுகள் எடுத்துக்காட்டின. (பார்க்க : முடிவுக் குறிப்பு 14)

(4) **ஒரு வேட்பாளர் செய்தியொன்றின் வழியாக, தொலைக்காட்சி அல்லது வானொலி அறிக்கை வழியாகத் தெரிவிக்கும் கருத்தொன்றினால் மற்றுமொரு வேட்பாளர், அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக்குழு பாதிக்கப்படும் சந்தர்ப்பம் இருக்குமானால், ஊடகத்தில் அது தொடர்பில் அத்தரப்பிற்கு / நபருக்கு தனது எதிர்வினையை எடுத்துச்சொல்லும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்** என்ற நெறிமுறை – 06 ஆனது பல தடவைகள் கண்டுகொள்ளாமல் விடப்பட்டிருப்பதை அவதானிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. (பார்க்க : முடிவுக் குறிப்பு 15)

(5) **ஏனையவர்களைவிட ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு முன்னுரிமை அளித்தலோ அல்லது குறைவான கவனஈர்ப்பு வழங்கப்படலோ நடைபெறாமை கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்** என்ற வழிகாட்டுநெறி 11 கரிசனைக்கு ஆட்படவில்லை. (பார்க்க : முடிவுக் குறிப்பு 16)

(6) **ஊடக அறநெறிகளைக் காப்பது குறித்த நிறுவனத்தின் பொறுப்பாகும்** என்ற வழிகாட்டுநெறி 27 அதிகமான சந்தர்ப்பங்களில் கடைப்பிடிக்கப்படவில்லை. (பார்க்க : முடிவுக் குறிப்பு 17)

(7) மேற்படி வழிகாட்டுநெறி கைக்கொள்ளப்படாமையை அரச கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடகங்களிலும், தனியார் ஊடகங்களிலும் ஆய்வாளர்களால் இனங்காணமுடிந்தது. (பார்க்க : முடிவுக் குறிப்பு 18)

(8) சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான தேர்தலுக்கான வாக்காளர்களின் உரிமையைப் பாதுகாக்கும் நோக்குடன் அமுலாக்கப்பட்ட ஊடக வழிகாட்டுநெறிகளை கௌரவிக்காமலிருப்பது, வாக்காளர்களின் உரிமையை மதிக்காமைக்கு ஒப்பானதாகும். ஊடக தொழிற்துறை உரிமையாளர்கள், ஊடகச் செயற்பாட்டாளர்கள், பிரஜைகள் என அனைத்துப் பங்கேற்பாளர்களும் இந்த உரிமையைப் பாதுகாக்க வினைத்திறனுடன் செயலாற்றவேண்டும்.

**முடிவுக் குறிப்புக்கள்:**

01) **சிரச** தொலைக்காட்சியின் **'சட்டன'** நிகழ்ச்சி ஜனவரி 23,2018 அன்று ஒளிபரப்பானபோது, சுயாதீன ஊடகச் செயற்பாட்டாளராகப் பங்கேற்ற ஜே. ஸ்ரீரங்கா, தனது எண்ணப்படியே பங்கேற்பாளர்களும் பேசும்வண்ணம் கவனமாயிருந்தார். இந்த வகையில், ஜே.வி.பி, பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ ஜே. ஸ்ரீரங்காவுக்கு தகவல்களை வழங்கவேண்டியதாயிருந்தது. இவ்வாறான சூழலை ஜனவரி 30ஆம் திகதிய நிகழ்ச்சியிலும் பிரதிபலித்தது. பங்கேற்பாளர்கள் தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் சந்தர்ப்பங்களை

வழங்காது தொகுப்பாளர்கள் தமது நிறுவன நிகழ்ச்சிநிரலையே அந்நிகழ்ச்சியில் முன்னிறுத்தியிருந்தனர்.

02) ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திஸநாயக்க பங்கேற்ற **ஹிரு** தொலைக்காட்சியின் ஜனவரி 22 ஆம் திகதிய **'சலகுன'** நிகழ்ச்சியில் இந்தச் சூழல் ஏற்பட்டது.

03) **ஹிரு** தொலைக்காட்சியின் ஜனவரி 29 ஆம் திகதிய **'சலகுன'** நிகழ்ச்சியில் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்றபோது இது அவதானிக்கப்பட்டது.

04) **தெரண** தொலைக்காட்சியின் ஜனவரி 30 ஆம் திகதிய **'வடபிட்டிய'** நிகழ்ச்சியில் பிமல் ரத்நாயக்க, மனுஷ நாணயக்கார, நளின் பண்டார, ரோஷான் ரணசிங்க ஆகியோர் பங்கேற்பாளராக இருந்தபோது, இது நடைபெற்றது.

05) **ஐ.ரி.என்.** தொலைக்காட்சியின் ஜனவரி 25 ஆம் திகதிய **'தீரணய'** நிகழ்ச்சி. நெறியாளர், பங்கேற்பாளர்களின் கருத்துக்களைப் பகிர வாய்ப்புத் தந்தார். ஆனால், வினாக்களுக்கான நேரடி எதிர்வினைகளை பங்கேற்பாளர்கள் தெரிவிக்கும் தேவை அவரால் உணரப்படவில்லை.

06) ஆய்விற்குட்படுத்தப்பட்ட சகல நிகழ்ச்சிகளிலும் அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகளின் ஆகக்குறைந்த பங்கேற்பாவது காணப்பட்ட நிலையில், ஜனவரி 23 ஆம் திகதிய **ஐ.ரி.என்.** நிகழ்ச்சியில் பஸில் ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார்.

07) **ரூபவாஹினி** தொலைக்காட்சியின் ஜனவரி 30 ஆம் திகதிய **'அத சிவுதேச விமசும'** நிகழ்ச்சி. அச்சு ஊடகங்களில் வெளியான அரசியற்கட்சிகள் குறித்த அறிக்கைள் அவற்றின் தேர்தல் கூட்டங்கள் பற்றிய செய்திகளுடன் தரப்பட்டன. ஆனாலும், ஸ்ரீலங்கா பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்கு ஜே.வி.பி. யை விட அதிக நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு அதிலும் குறைவான ஒதுக்கீடே வழங்கப்பட்டிருந்தது.

08) **ஹிரு**வின் **'பத்திரே விஸ்தரே'** நிகழ்ச்சி. **தினமின** மற்றும் **சிலுமின** பத்திரிகைகளின் அறிக்கைகள் தெரிவுசெய்யப்பட்டிருக்காதவிடத்து, பிணைமுறி மற்றும் ஊவா முதலமைச்சர் பாடசாலை அதிபர் ஒருவரை முழந்தாளிடச் செய்த விவகாரங்கள் தொடர்பில், ஒவ்வொரு செய்திப் பத்திரிகைகளில் இருந்தும் செய்திகள் வாசித்தளிக்கப்பட்டன. அத்துடன், நிகழ்ச்சித் தொகுப்பாளரும் தனது பார்வைகளை இந்த விவகாரங்கள் தொடர்பில் முன்வைத்திருந்தார்.

09) **சுவர்ணவாஹினி**யின் **'அத தவச'** நிகழ்ச்சி. தேர்தல் மற்றும் அரசியல் தொடர்பான பத்திரிகை அறிக்கையிடல்கள் மாத்திரமல்லாது, ஏனைய செய்திகளும் அளிக்கை செய்யப்பட்டதுடன், சமநிலையிலும் அந்த முன்வைப்புக்கள் இடம்பெற்றிருந்தன. குறைந்த எண்ணிக்கையிலான செய்திகள் வழங்கப்பட்டாலும் (உதாரணமாக, ஜனவரி 29 இல் ஆக செய்திகள் மாத்திரமே வாசிக்கப்பட்டன), அனைத்து அரசியற்கட்சிகளும் சமமான பிரதிநிதித்துவத்தைப் பெறுவதில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

10) **தெரண**வின் **‘தெரண அருண’** நிகழ்ச்சி. ஜனவரி 25, 2018 அன்று எடுத்தாளப்பட்ட 14 செய்திகளில் 11 செய்திகள் பிணைமுறி மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்களாக அமைந்திருந்தன.

11) **தெரண**வின் **‘தெரண அருண’** நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியில் தொகுப்பாளரின் கருத்துக்கள் சுதந்திரமாகப் பகிரப்பட்டன. லங்காதீப மற்றும் திவயின செய்திப்பத்திரிகைகளில் வெளியான கேலிச்சித்திரங்களைப் பற்றி அவரது கருத்துக்கள் உரத்துச்சொல்லும் வகையில் அமைந்திருந்தன.

12) சில அரசியற்கட்சிகள் அதிகமாகவும் சில குறைந்தளவிலும் கவனத்தைப் பெற்றதை அட்டவணை 1 உம், வரைபடம் 1 உம் அடையாளங் காட்டுகின்றன.

13) ஊடகங்களால் அரசியற்கட்சிகள் மீது நடுநிலை தவறிய கவனம் செலுத்தப்பட்டமை அல்லது அவற்றுக்கு மிக அதிகமான விளைபயன் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் – முடிவுக் குறிப்பு 11, அட்டவணை 2 அவற்றுடன் வரைபடங்கள் 6 உம் 7 உம் எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக, **ரூவாஹினி, ஐ.ரி.என்** மற்றும் ஏரிக்கரைப் பத்திரிகைகளான **தினமின, சிலுமின, ரச** ஆகியன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்கும், **சிரச** ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுவிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், **சுவர்ணவாஹினி** ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமது அறிக்கையிடல்களில் சாதகமாயிருந்தன.

14) செய்திப்பத்திரிகைகளின் கேலிச்சித்திரங்கள் தொடர்பில் – **பத்திரே விஸ்தாரே, தெரண அருண** ஆகியவற்றின் அளிக்கையாளர்கள் தமது சொந்தக் கருத்துக்களை வழங்கியிருந்தனர்.

15) தமது பிரதேசங்களிலான விடயங்கள் தொடர்பில் வேட்பாளர்களிடம் கேள்விகள் கேட்கப்படுவதைவிட, தேசிய மற்றும் மாகாண விடயங்கள் (பிணைமுறி, ஊவா மாகாண முதலமைச்சர் விவகாரம்) பற்றியே அதிக சந்தர்ப்பங்களில் வேட்பாளர்களிடம் கேள்விகள் தொடுக்கப்பட்டன. **தினமின** மற்றும் **திவயின** பத்திரிகைகள், **சிரச** தொலைக்காட்சி ஆகியன இவ்விதம் அதிகம் செயற்படுவனவாக இருந்தன.

16) தமக்கு விருப்பமான வேட்பாளர்களுக்குச் சாதகமாக, செய்திப்பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் செயற்பட்ட விதங்களை – அட்டவணை 2 மற்றும் 3, வரைபடங்கல் 6, 7 என்பன காட்டுகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மேயர் வேட்பாளர் அசாத் சாலிக்கு **சிரச** இவ்வாறான பிரபல்யத்தை வழங்கியது.

17) துல்லியம், விருப்பு வெறுப்பின்மை, நடுநிலையான அறிக்கையிடல் போன்ற அடிப்படை ஊடக அறநெறிகள் என்பன ஆய்விற்குள்ளான சகல தொலைக்காட்சிகளாலும் அச்சு ஊடகங்களாலும் மீறப்பட்டிருப்பதை சகல முடிவுக் குறிப்புக்களும் அட்டவணை 1, 2, 3 மற்றும் வரைபடங்கள் 1,6,7 என்பன தெளிவாகக் காட்டுகின்றன.

18) **ரூபவாஹினி, ஐ.ரி.என்.** ஆகியனவும், **தினமின, ரச** ஆகிய ஏரிக்கரைப் பத்திரிகைகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜ பெரமுன மற்றும் ஜே.வி.பி.யைவிட அதிகம் ஒளிபரப்பு நேரத்தை / அச்சு வெளியை வழங்கியிருந்தன (மதிப்பீட்டுக்

காலத்தில் ஏரிக்கரைப் பத்திரிகைகளில் ஒரேயொரு செய்தி மாத்திரமே ஜே.வி.பி. யைப் பற்றி வெளியாகியிருந்தது). பிரதமரை (ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்) குறைந்த விருப்பத்திற்குள்ளாக்கி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் விசேடமாக ஜனாதிபதியையும் கரிசனையுடம் **சிரச** முன்னிறுத்தியது. ஆனால், சஜித் பிரேமதாசவைப் பற்றிய கவனத்தைப் பெறும் செய்திகளில் **சிரச** அவதானம் செலுத்தியமை கருத்திற்கொள்ளப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி பற்றிய விருப்பத்திற்கொவ்வாத வகையிலான அறிக்கையிடல்கள் **திவயின, ரிவிர, மௌபிம** பத்திரிகைகளில் இடம்பெற்றிருந்தன. பிரதமர், மங்கள சமரவீர, சாகல ரத்நாயக்க ஆகியோரது கருத்துக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கி, ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பான வெளியை **சுவர்ணவாஹினி** தொடர்ந்து வழங்கிவந்திருந்தது. அட்டவணை 1,2,3 மற்றும் வரைபடங்கள் 1,6,7 ஆகியன மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சார்பாக **ஹிரு** நிலையெடுத்திருந்தமையைக் காணமுடிகின்றது.

[1] The interim evaluation may be accessed via http://www.nsmrlk.org/pdf/Inerium%20media%20monitoring%20report%201%20local%20government%20election%202018.pdf

[2] Owing to practical difficulties involving discussions/debates and presentation of the morning newspapers on SLRC, for the period under evaluation, all of the programs were not analysed. However, data analysis of the same will be made available in the final report.